# NEWSLETTER

**JULY 2024**

VIVEKANANDA
COMMUNITY FOUNDATION




## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


## மலையகம் நோக்கிய பயணம்



எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பினூடாக விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியினரால் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் மனபாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் வண்ணம் அவர்கள் வழிதவறி செல்வதனை தடுக்கும் வகையிலான விடயங்கள் உள்ளடக்கிய வாழ்வியலும் வழிகாட்டலும் என்னும் பயிற்சி முறைமையானது ஒரு நாள் பயிற்சி பட்டறை மற்றும் 3 மாத பயிற்சி என எதிர்கால சந்ததியினை வலுப்படுத்தும் ஒரு செயற்பாடாக வடகிழக்கு மற்றும் மலையகம் நோக்கி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் மலையக பாடசாலைகளில் இருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைக்கு அமைவாக 13.07.2024 – 14.07.2024ம் திகதி பதுளை/ஊவா ஹைலண்ட்ஸ் தமிழ் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள் மற்றும் உயர்தர பிரிவு மாணவர்களுக்கான அறிமுக வாழ்வியல் பயிற்சி பட்டறை எமது வளவாளர்கள் குழுவால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

எமது திட்டப் பிரதேசங்களையும் தாண்டி மலையக மக்களுக்கும் எம் சேவையினை வழங்க, தொடர்பினை ஏற்படுத்திய எமது கல்லூரியின் அதிபர் த.சந்திரசேகரம் அவர்களது ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் திரு.எஸ்.கண்ணியமூர்த்தி அவர்களது தலைமையில் பயிற்சியிப் பட்டறையினை சிறப்பாக நடைபெற்றது..







# Top news

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பனையோலைப் பயிற்சி

விசேட தேவையுடைய சிறார்களை மேம்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்தில் காணப்படும் புகலிடத்தில் விஷேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்றனர். அவர்களுக்கான கணினிப் பயிற்ச்சி நெறி, சத்துணவு பொதி வழங்கல் மற்றும் போக்குவரத்து செலவு போன்ற பல்வேறு செயற்பாடுகளை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளை முன்னெடுத்துச் செல்கின்றது. அந்த வகையில் இம் மாணவர்களுக்கான வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் திட்டமாக பனையோலைப் பயிற்ச்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக **திரு.வாமதேவன் அமர்நீதி, அமெரிக்கா** அவர்களின் அனுசரனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 08.07.2024ம் திகதி இத் திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் வண்ணமாக எமது அறக்கட்டளையின் திட்ட முகாமையாளர் உள்ளிட்ட குழுவினர் கலந்து சிப்பித்தமை குறிப்பிட்த்தக்கது.





## பசுமைப் புரட்சி

புவி வெப்பமாதல் மற்றும் சுற்றுச் சூழல் அழிவுறல். எனும் தொனிப்பொருள் தாங்கிய கருத்தமர்வானது மட்/ ஆரையம்பதி இ.கி.மி பாடசாலையின் கற்றல் கூடத்தில் 04.07.2024 ஆம் திகதி இடம்பெற்றது. அதிபர், சூழல் பாதுகாப்பு கழக பொறுப்பாசிரியர், சூழல் பாதுகாப்பு இணைப்பாளர், முகாமையாளர் உள்ளிட்ட 25 மாணவர்களுடன் பல்வேறுபட்ட கருத்து பரிமாறல்களும் இடம்பெற்றது.



## ஆலங்குளம் கிராமத்தின் பாடசாலைக்கான களதரிசனம்

எமது அறக்கட்டளைக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்திலே எல்லை கிராமமாக காணப்படும் ஆலங்குளம் அ.த.க பாடசாலைக்கு 04.07.2024ஆம் திகதி சென்று எமது குழவால் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது

இந்த கிராமத்தில் 320 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு தரம் 9 வரை கல்விகற்கும் வசதியுடனான பாடசாலையே உள்ளது. சுற்றிவர இருக்கும் 2 கிராமங்களிலும் பாடசாலை இன்மையால் அந்த கிராமங்களிற்கும் பொதுவான பாடசாலையாக இப்பாடசாலை காணப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து அவர்களின் கோரிக்கைகள் பற்றியும் கிராமத்தை மேம்படுவதற்கான எமது பங்களிப்பு தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.




# ஆலயத்தின் அறப்பணிக்கு முன்மாதிரி கிராமம்.

ஆரையம்பதி மாவிலங்கன்துறை பிரதேசத்தில் காணப்படும் ஆலயம் ஒன்றின் கோரிக்கைக்கு அமைவாக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான உதவி வழங்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை இந்த மாவிலங்கன்துறை கிராமத்துடனும் இந்த ஆலயத்துடனுமான எமது தொடர்பு நீடித்துக்கொண்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் இவர்களை அவதானித்த வகையில், ஒரு ஆலயம் எவ்வாறு ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் போல் செயற்படுகின்றது என்பதற்கிணங்க, தொடர்ச்சியாக எமது செயற்பாடுகளுடன் இணைந்து அவர்களின் செயற்பாடுகளிற்கு தேவையான உதவிகளை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஊடாக இந்த ஆலயத்தின் நடவடிக்கைகளை நாம் ஊக்கப்படுத்தும் வகையில் வழங்கிக்கொண்டிருக்கின்றோம்.
அவற்றில் சில...

1. இந்த பாடசாலையில் க.பொ.த உயர்தரம் கல்வி கற்கும் 5 மாணவர்களையும், 4 சாதாரண தரத்திற்கு கீழ் உள்ள மாணவர்களையும் பொறுப்பெடுத்து மாதாந்த உதவிகள் வழங்கப்படுகின்றது.
2. ஆலய நிருவாகம், இளைஞர் கழகம் போன்றவற்றில் உள்ள உறுப்பினர்களிற்கான தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படுகின்றது.
3. இங்கு பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களிற்கு வார விடுமுறை நாட்களில் நடமாடும் கணினி பயிற்சியினை நடாத்தப்படுகின்றது.
4. அறநெறி பயிற்சியில் உள்ள மாணவர்களிற்கு அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டது.

## சேமிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்தல்

பொருளாதார மாற்றத்திற்கான வலுவூட்டல் எனும் திட்டத்தின் கீழ் உதவி பெற்ற திருமதி.யோகநாயகி அவர்களின் சேமிப்பத் திட்டத்தினை ஊக்குவிக்கும் நோக்கில் 10.07.2024 ஆம் திகதி சேமிப்பு உண்டியல் வழங்கப்பட்டது.
இச்செயற்பாடு மூலமாக அவரின் தொழிலை முன்னேற்ற முடிவதோடு அவரின் பொருதாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவதே நோக்கமாகும்.



## பாதணி வழங்கி வைத்தல்

மட்/விஸ்னு பாடசாலையல் கல்வி பயிலும் 8ம் தரத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரின் வேண்டுகோளிற்கு ஏற்று அவருக்கான பாதணியானது 10.07.2024 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டது.

இதற்கான உதவியினை சுவிஸ் நட்டில் வசிக்கும் **திரு.காந்தரூபன்** அவர்கள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## காலாண்டுக்கான கலந்துரையாடல்

இந்த வருடத்திற்கான 2 வது காலாண்டு செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலானது 17.07.2024ஆம் திகதி மட்டக்களப்பில் Amirda (PVT) வளாகத்தில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி- புதுக்குடியிருப்பு, விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி- கொம்மதுறை, மற்றும் அமிர்தா நிறுவனம் போன்ற அனைத்து நிலையங்களும் தமது செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டம் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன் தேவையான ஆலோசனைகளும் வழங்கி வைக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் ஒவ்வொரு நிலையத்தில் முகாமையாளர்கள் உள்ளிட்ட விவேகானந்த குடும்பத்தின் அனைத்து சேவையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.






## சுற்றாடல் பாதுகாப்புப் படையணியுடனான கலந்துரையாடல்

சுற்றாடல் மேம்பாட்டு முன்னோடி குழுவினை உருவாக்கும் நோக்கில் 18.07.2024 அன்று சூழல் பாதுகாப்பு இணைப்பாளர் மற்றும் இரு பாடசாலைகளைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் உள்ளடங்கலாக விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்ட முகாமையாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது எவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் சுற்றாடல் முன்னோடி குழவினை உத்தியோக பூர்வமாக பதிவு செய்வது பற்றியும் தீர்மானம் எடுக்கப்பட்டது.



## சர்வதேச போஷாக்கு வார கொண்டாட்டம்

சர்வதேச போஷாக்கு வாரத்தை முன்னிட்டு வந்தாறுமூலை சக்தி பாலர் பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆறு பாலர் பாடசாலைகள் இணைந்து போஷாக்கு வாரத்தினைக் கொண்டாடினர்.

இதன் போது பெற்றோர்களால் விதம் விதமான உணவுப் பொருட்கள் தயார் செய்து வரப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டதுடன் மாணவர்களுக்கான கலைநிகழ்வுகளும் நடாத்தப்பட்டது. இதற்காக பரிசுப் பொருட்கள் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினால் வழங்கி வைக்கப்பட்டது.





## முல்லைத்தீவிற்கான களவிஜயம்



முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் மற்றும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியினைப் மேற்பார்வையிடுவதற்காக களவிஜயமானது 19.07.2024 தொடக்கம் 22.07.2024 ஆம் திகதி வரை தொடர்ந்து நான்கு தினங்கள் மேற்க்கொள்ளப்பட்டது. இக் களவிஜயமானது நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர் உள்ளிட்ட ஆறு போர் கொண்ட குழவினரால் மேற்க் கொள்ளப்பட்டது.



இதன் போது கல்லூரி மற்றும் சாரதா நிலையத்தின் செயற்பாடுகள் பார்வையிடப்பட்டதோடு மாணவர்களுக்கான வாழ்வியல் திறன் பயிற்ச்சிகளும் இடம்பெற்றது.

## பசுமை உலகிற்கு ஓர் அடித்தளம்...



விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் பசுமைப்புரட்சி திட்டத்தின் கீழ் பாடசாலை மட்டங்களிலிருந்து சுற்றாடல் முன்னோடிப் படையணி மாணவர்களை ஜனாதிபதி விருதிற்கு பரிந்துரைக்கும் வண்ணம் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக மாணவர்களும் இணைக்கப்பட்டு சுற்றாடல் மேம்பாட்டு முன்னோடி குழுவானது 24.07.2024ல் உருவாக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எமது திட்டமுகாமையாளர், பிரதேச செயலகத்தின் சூழல் பாதுகாப்பு இணைப்பாளர், இரு பாடசாலைகளைச் சேர்ந்த நான்கு மாணவர்களுட்ட தொடர்பான சேவையாளர்களும் கலந்துகொண்டனர்.

எமது பாலர் பாடசாலை ஆசிரியர்களை தொழில் ரீதியாக மாத்திரமின்றி தனிமனிதனாகவும் வலுவூட்டும் வகையில் மற்றும் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் சிறார்களில் மறைமுகமாக மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் ஆசிரியர்களுக்கான அடிப்படைக் கணிணி மற்றும் ஆங்கிலப் பயிற்சி நெறியானது கடந்த மூன்று மாதகாலமாக நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வானது 24.07.2024ஆம் திகதி எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றதோடு எமது அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்டமுகாமையாளருட்பட அனைத்து சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பயிற்சி தொடர்பான காட்சிப்படுத்தலைத் தொடர்ந்து ஆசிரியர்களின் குழு நிகழ்வுகளும் பாலர் பாடசாலைகளில் இவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் சம்பந்தமான கலந்துரையாடலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## பாலர் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கல்

25.07.2024 ஆம் திகதி பாலர் பாடசாலை மாணவர்களுக்கான சீருடையானது வழங்கி வைக்கப்பட்டது. இதில் நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர் மற்றும் எமது சேவையாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது நலன்புரி பாலர் பாடசலை ஆரையம்பதி, வந்தாறுமூலை சக்தி பாலர் பாடசாலை, பலாச்சோலை விபுலானந்தா பாலர் பாடசாலை போன்ற பாடசாலை சிறார்கள் சீருடைகளைப் பெற்றுக்கொண்டனர்.









## மொழித்திறனும் கணினி மயமாக்கலும்

அண்மித்த கிராமங்களில் அபிவிருத்தி சார் செயற்பாடுகளில் பாடசாலைக் கல்வி பயிலும் (தரம் 6-9) மாணவர்களுக்கு அடிப்படைக் கணினி மற்றும் ஆங்கில வகுப்புக்கள் நடாத்துவது தொடர்பில் கலந்துரையாடலானது 27.07.2024 ஆம் திகதி கோவில்க்குளம் சிகரம் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் 19 மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் எமது அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் திட்ட முகாமையாளரும் கலந்து கெண்டதோடு வகுப்புக்கள் நடாத்துவது பற்றிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டது.



விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் ஆடி மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்



